சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 58/2020

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நீலகண்டன் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | பூபதி | ஜாதி | |
| கிராமம் | ஆகாரம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**03.07.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 16.05.2003 தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 12.07.2006 தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2,** 02.03.2007 தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3,** 28.11.2007 தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**, 01.09.2014 தேதியிட்ட அடமானம் போடப்பட்ட பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5,** 01.11.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.6,** 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7**, 2ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8,** 3ம்பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.9**, 4ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10,** 5ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.11**, 6ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.12,** 18.11.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.13,** 18.11.2019 தேதியிட்ட 4ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.14**, 05.11.2019 தேதியிட்ட 6ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.15**, 1ம் அயிட்டச் சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சொத்து மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.16,** 2ம் அயிட்டச் சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சொத்து மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.17,** 10.10.2019 தேதியிட்ட வில்லங்க சான்று **வா.சா.ஆ.18,** ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ.19** அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது. வம்சாவழி பட்டியல் **வா.சா.ஆ.20** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.